**இனிமையான குழந்தைகளே! உங்களை அனைத்து துக்கத்திலிருந்து விடுவிப்பதற்காக பாபா வந்துள்ளார். நீங்கள் இப்போது இந்த சோகவனத்திலிருந்து சோகமற்ற உலகத்திற்குச் (துன்பங்கள் நிறைந்த உலகிலிருந்து சத்யுகத்திற்குச்) செல்கிறீர்கள். இந்த விஷ (விகாரங்களின்) நதியினைக் கடந்து செல்கிறீர்கள்.**

கேள்வி: நினைவில் அமர்கிற நேரத்தில் எந்த விசயத்தின் தடை ஏற்படுவதில்லை, எந்த விசயத்தின் தடை ஏற்படுகிறது?

பதில்: நினைவில் அமரும் போது எந்த ஒரு சப்தம் அல்லது கூச்சலினால் தடை ஏற்படுவ தில்லை. அது ஞானத்தில் ஏற்படுகிறது. ஆனால் நினைவில் மாயாவின் தடைகள் அவசியம் ஏற்படும். மாயா நினைவு செய்யும் நேரத்தில் தான் தடைகளை ஏற்படுத்தும். அநேக விதமான சங்கல்பவிகல்பங்களைக் கொண்டு வரும். அதனால் பாபா சொல்கிறார், குழந்தைகளே, எச்சரிக்கையாக இருங்கள். மாயாவிடம் குத்து வாங்காதீர்கள். சிவபாபா உங்களுக்கு அளவற்ற சுகம் தருபவர், சர்வ சம்மந்தங்களிலும் இனிமையாக இருப்பவர் லி அவரை மிகமிக அன்போடு நினைவு செய்யுங்கள். நினைவின் பந்தயத்தில் மிக வேகமாக முன்னேறிச் செல்லுங்கள்.

பாடல்: இரவுநேரப் பயணி களைத்துப்போகக் கூடாது.....

ஓம் சாந்தி. இனிமையிலும் இனிமையான குழந்தைகள் யாத்திரையில் இருக்கிறீர்கள். இது போல் யார் அமர்ந்திருக்கின்றனரோ, அவர்கள் யாத்திரையில் இருப்பதாகச் சொல்ல முடியாது. இந்த யாத்திரை எப்படி அற்புதமாக உள்ளது! சாந்தியின் யாத்திரை, சாந்திதாமம் செல்வதற்கான யாத்திரை. இராவணனின் இராஜ்யத்தில் துன்பங்களால் மூச்சுத்திணறிச் சாக வேண்டியுள்ளது. ஒரு சத்தியவான் சாவித்திரியின் கதை உள்ளது இல்லையா? லிலி காலனிடம் இருந்து கூட சாவித்திரி, சத்தியவானின் ஆத்மாவைத் திரும்பக் கொண்டு வந்தார். உண்மையில் அந்த மாதிரி எந்த ஒரு விஷயமும் கிடையாது. மற்றப்படி அரைக்கல்பம் காலன் தொல்லை தருகிறான். கடைசியில் மூச்சுத்திணறல் வருகிறது இல்லையா? வருடாலிவருடம் எரிக்கப்படும் இராவணன் நம்முடைய விரோதி என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. பாபா சொல்கிறார், நான் வந்துள்ளேன், உங்களை சோகவனத்திலிருந்து வெளியில் கொண்டு வருவதற்காக லி அங்கே மூச்சுத் திணறல் (துக்கம்) இருக்காது. இங்கோ அநேக விதமான துன்பங்கள் உள்ளன. தாய் தந்தை, பதி மற்றும் குழந்தைகளின் துன்பங்களை அடைந்து கொண்டே உள்ளனர். கணவன்மார் விகாரத்தில் சிக்க வைக்கின்றனர். பாபா வந்து இந்த அனைத்து மூச்சுத்திணறல் களில் இருந்தும் விடுவிக்கின்றார் மற்றும் புது உலகத்திற்கு அழைத்துச் செல்கிறார். இப்போது ஆத்மாவின் இறக்கை துண்டிக்கப் பட்டுள்ளது. ஆத்மாவினால் பறக்க முடியவில்லை. பிறகு நினைவு யாத்திரை செய்ய முடியாது. நிச்சயமாக இது புத்தியோகத்தின் யாத்திரை. மன்மனாபவ என எழுதப்பட்டுள்ளது இல்லையா? இதன் அர்த்தம் யாத்திரை என்று யாரும் புரிந்து கொள்ளவில்லை. இராமர் குரங்குகளின் சேனையைக் கொண்டு சென்றதாகவும் குரங்குகள் பாலம் கட்டியதாகவும் சொல்லப் படுகிறது. குரங்குகள் எப்படிப் பாலம் அமைக்கும்? இது உங்களுடைய நினைவு என்ற

பாலமானது இப்போது உருவாகிக் கொண்டிருக்கிறது. இந்தப் பாலத்தின் மூலம் நீங்கள் விஷ நதியைக் கடந்து சென்று விடுகிறீர்கள். பாபா இந்த நதியில் நீந்துவதற்குக் கற்றுத் தருகிறார். அவர் படகோட்டி இல்லையா? விஷம் நிறைந்த (விகாரங் களின்) நதியைக் கடந்து செல்ல வைத்து சிவாலயத்திற்கு அழைத்துச் செல்கிறார். அமிர்தத்தை விட்டு விட்டு விஷத்தை எதற்காக அருந்த வேண்டும் எனக் கேட்கிறார். ஆக, ஞானம் அமிர்தம் எனச் சொல்லப்படுகிறது. ஞானத்தால் சத்கதி கிடைக்கிறது. சாஸ்திரங்களை ஞானம் எனச் சொல்ல மாட்டார்கள். அது பக்தியின் சாதனமாகும். சாஸ்திரங்கள் படிப்பதால் சத்யுகம் வர முடியாது. சத்கதி கிடைக்க முடியாது. அதனால் அதை ஞான அமிர்தம் எனச் சொல்ல மாட்டார்கள், அது பக்தியாகும். ஞானத்தில் முதலில் 100 சதவிகித சத்கதி, பிறகு மெது மெதுவாகக் கீழே இறங்குகின்றனர். சத்யுகத்திலும் கூட துர்கதி ஏற்படுகிறது எனச் சொல்ல மாட்டார்கள். அங்கே துர்கதியின் பெயர் அடையாளமே இருக்காது. கலியுகத்தில் அனை வருக்கும் துர்கதி ஏற்படுகிறது.

நீங்கள் அறிவீர்கள், அனைவர் மீதும் தயை காட்டுபவராகிய தந்தை ஒருவர் தான். அவர் தான் ஸ்ரீலிஸ்ரீ எனச் சொல்லப் படுகிறார். பிறகு ஸ்ரீஸ்ரீ என்ற டைட்டிலை அனைவருக்கும் வைத்து விடுகின்றனர். தேவதைகள் தான் ஸ்ரீ என்று சொல்லப் படுகின்றனர். நீங்கள் பாபாவுக்கு முன் உறுதிமொழி கொடுக்கிறீர்கள் லி நாங்கள் ஒரு போதும் விகாரத்தில் செல்ல மாட்டோம். உறுதிமொழி கொடுத்து விட்டுப் பிறகு தவறு செய்தால் தந்தையின் வலது கரமாக தர்மராஜரும் அமர்ந்துள்ளார். தர்மராஜர் மன்னிக்க மாட்டார். பாபாவும் குப்தம், ஞானமும் குப்தம், பதவியும் குப்தம். இதைக் குழந்தைகள் நீங்கள் தான் அறிந்திருக்கிறீர்கள், அதாவது நமக்கு ஸ்ரீமத் தருபவர் ஒன்றும் மனிதர் கிடையாது. பிரஜாபிதா பிரம்மா மூலம் பாபா படைப்பினைப் படைக்கிறார். பிரஜாபிதா சூட்சுமவதனத்திலோ இருக்க மாட்டார். நிச்சயமாக இங்கே தான் இருப்பார். குழந்தைகள் நீங்கள் புரிந்து கொண்டு விட்டீர்கள், பிரம்மா இச்சமயம் பிராமணராக உள்ளார். இவருக்கு வருங்காலத்தில் இராஜ்யம் கிடைக்கிறது. தேவதைகள் தூய்மை இல்லாத உலகத்திலோ இராஜ்யம் செய்ய முடியாது. எனவே, பழைய உலகத்தின் விநாசம் நடைபெற வேண்டும். நிச்சயமாக விநாசம் நடைபெறவும் செய்யும். இப்போது கொஞ்சம் சமயம் உள்ளது. இப்போது உங்களுடைய புதிய மரத்தின் (படைப்பின்) நாற்றும் கூட இன்னும் நடப்படவில்லை. முன்பு பாடி வந்தனர் லி நீங்கள் தான் தாயும் தந்தையும்....... அனைவருக்கும் முன்னிலையில் இந்தப் பாடலைப் பாடிக் கொண்டே உள்ளனர். எதையும் புரிந்து கொள்ளவில்லை. நல்லது, சிந்தனை செய்யுங்கள், பிரம்மா எப்படித் தாய் ஆக முடியும்? லட்சுமிலிநாராயணருக்கும் கூட அவர்களின் இராஜ்யம் நடைபெறுகின்றது. ஆகவே அவர்களைத் தாய்லிதந்தை எனச் சொல்ல முடியாது. ஆக, இச்சமயம் பரமபிதா பரமாத்மா நடைமுறையில் தாய்லிதந்தையின் பாகத்தை நடித்துக் கொண்டிருக்கிறார். பிறகு பக்தி மார்க்கத்தில் மகிமை பாடப் படுகின்றது. அதிலும் கூட முதல்லிமுதலில் சிவபாபாவை, நீங்கள் தான் தாயும் தந்தையும்...... எனச் சொல்கின்றனர். பின்னால் லட்சுமி நாராயணர், சீதாராம் அனைவரையும் சொல்லிக் கொண்டே இருக்கின்றனர். புத்தியோ கொஞ்சம் கூடக் கிடையாது. சிவபாபா இனிமையானவர். இந்த மனிதர்கள் அனைவரும் அசுரவழிப்படி துக்கத்தையே கொடுக் கின்றனர். நான் அனைத்திற்கும் பதிலாக அனைவரைக் காட்டிலும் அதிக சுகம் கொடுக்கிறேன். நான் வள்ளலாவேன். நான் குழந்தை களாகிய

உங்களுக்கு ஸ்ரீமத் கொடுக்கிறேன்லி குழந்தைகளே, நீங்கள் எவ்வளவு நினைவில் இருக்கிறீர்களோ, சுயதரிசனச் சக்கரத்தைச் சுற்றுகிறீர்களோ, தாமரை மலருக்குச் சமமாக ஆகிறீர்களோ, அவ்வளவு உயர்ந்த பதவி பெறுவீர்கள். இந்த அலங்காரங்களின் அர்த்தத்தை யாராலும் புரிய வைக்க முடியாது. அலங்காரத்தை நீங்கள் தான் தாரணை செய்கிறீர்கள். அடையாளம் விஷ்ணுவுக்குக் கொடுக்கப் பட்டுள்ளது. உண்மையில் மூன்றாவது கண் கூட உங்களுக்குக் கிடைக்கிறது. திரிநேத்திரி, திரிகாலதரிசி...... என்ற சொல் உள்ளது இல்லையா? இதன் அர்த்தமும் கூட இச்சமயம் ஆத்மாவாகிய உங்கள் புத்தியில் உள்ளது. ஆத்மாவின் புத்தியில் தான் அனைத்தும் உள்ளது. எனது கண், மூக்கு, காதும் கூட சரீரம் எனச் சொல்வ தில்லை. ஆத்மா சொல்கிறது, இது எனது சரீரமாகிய மாளிகை. ஆத்மாவுக்குத் தெரிந்துள்ளது, அதாவது ஆத்மாவாகிய எனக்குள் 84 பிறவிகளின் பாகம் விதிக்கப் பட்டுள்ளது. எவ்வளவு குப்தமான விஷயங்கள்! ஆத்மாவை ராக்கெட் என்றும் சொல்கின்றனர். இந்த ஆத்மா சரீரத்தை விட்டு லண்டன் செல்ல வேண்டுமென்றால் ஒரு விநாடியில் சென்று விடும். அவர்கள் எவ்வளவு வேகமான ராக்கெட்டை உருவாக்கியுள்ளனர், அது காலையில் சென்றால் மாலை யில் போய்ச் சேர்ந்து விடுகிறது. முன்பு கப்பலில் 3லி4 மாதங்களில் சென்றனர். இப்போதும் கப்பலில் ஒரு மாதம் ஆகி விடுகிறது. ஏரோப்ளேனில் ஒரு நாள். ஆனால் ஆத்மா மிக வேகமான ராக்கெட் ஆகும். அது ஒரு விநாடியில் போய்ச் சேர்ந்து விடும். அதை யாராலும் பார்க்க முடியாது. ஆத்மாக்கள் உங்களுக்கு ஆல் ரவுண்ட் பார்ட் உள்ளது. நல்லது, பரமாத்மா வின் பார்ட் என்ன? துவாபரயுகத்தில் இருந்து எனக்கு சாட்சாத்காரம் செய்விக்கும் பார்ட் உள்ளது. யார்லியார் எந்த பாவனையோடு என்னை நினைவு செய்கிறாரோ, அவருடைய மனதின் ஆசைகளை நிறைவேற்றுகிறேன். இப்போது எனக்கு ஞானம் கொடுப்பதற்கான பார்ட். தூய்மை இழந்தவர்களைப் தூய்மையாக்குவதற்கான பார்ட். உங்களை மாஸ்டர் ஞானம் நிறைந்தவர்களாக, இறைவனின் குழந்தைகள் மாஸ்டர் இறைவனாக ஆக்குகிறேன். யார் கல்பத்திற்கு முன் புருஷார்த்தம் செய்திருந்தனரோ, அவர்கள் தான் செய்வார்கள். குழந்தைகள் சொல் கின்றனர், கல்பத்திற்கு முன்பு வந்திருந்தோம், இப்போது மீண்டும் ஆஸ்தியை அடைந்து கொண்டிருக்கிறோம். யாரிடம்? தாய்லிதந்தையிடம். சரஸ்வதி அனைவரின் தாயாவார். அவருடைய தாய் இந்த பிரம்மா ஆவார். இவருக்குத் தாயோ யாரும் கிடையாது. சிவபாபா தாமே சொல்கிறார், நீ என்னுடைய மனைவி (பத்தினி). பிறகு நான் சொல்கிறேன், பதி இல்லாமல் உணவை நான் எப்படி உண்பேன்? ஆகவே நல்லது, சிவபாபா மற்றும் நான், இருவரும் சேர்ந்து உண்ணுகிறோம். நஷாவோ இருக்கிறது இல்லையா? நீங்களும் கூட சொல்கிறீர்கள், பாபா தரகராகி வந்துள்ளார், தம்மோடு திருமண நிச்சயதார்த்தம் செய்வதற்காக. நீங்கள் ஸ்ரீமத் படி பரமாத்மாவோடு அனைவருக்கும் திருமண நிச்சயதார்த்தம் செய்விக் கிறீர்கள். பண்டிதர்கள் விகாரத்தின் கங்கணம் கட்டுவிக்கின்றனர். அதை பாபா ரத்து செய்விக் கிறார். பாபா சொல்கிறார், நீங்கள் ஞான சிதையில் அமருங்கள், அப்போது வெள்ளையாக (தூய்மையாக) ஆகி விடுவீர்கள். காமசிதையில் அமர்ந்து நீங்கள் முகத்தை ஏன் கறுப்பாக்கிக் கொள்கிறீர்கள்? ஷியாம்லிசுந்தர் என்பதன் அர்த்தத்தை நீங்கள் அறிவீர்கள். ஸ்ரீகிருஷ்ணர் சுந்தர் (அழகானவர், தூய்மையானவர்). இப்போதோ அவரும் கூட ஷியாமாக உள்ளார். இப்போது பாபா வந்து தம்முடைய அறிமுகம் கொடுத்துள்ளார்.

நீங்கள் பதீதலிபாவனர் கடவுளாகிய தந்தையின் மாணவர்கள். ஆகவே, இது பாடசாலை. பாட சாலையில் படிப்பு நடைபெறும். முயற்சி செய்ய வேண்டியதுள்ளது. மற்ற சத்சங்கங்களில் முயற்சியின் விஷயம் இல்லை. அங்கோ கீதை கேட்டோம், கிரந்தம் கேட்டோம், வீட்டுக்குப் போனோம் என்று இருக்கும். அங்கே தூய்மை யாகுங்கள், யாத்திரை செய்யுங்கள் என்று யாரும் சொல்ல மாட்டார்கள். இன்னும் போனால் இந்த உலகாயத யாத்திரைகள் முதலானவை நின்று போகும். இடி மின்னல் வந்தது, விபத்து நடந்தது என்றால் யாரும் யாத்திரையில் செல்ல மாட்டார்கள். ஏனென்றால் உங்களின் யாத்திரை வேகமெடுத்துக் கொண்டே போகும். நமது யாத்திரை சிவாலயத்தின் பக்கம். முதலில் சிவபுரி சிவாலயத்திற்குச் செல்வீர்கள். பிறகு சிவன் ஸ்தாபனை செய்த புரியாகிய (இராஜ்யம்) சிவாலயத்திற்கு (சொர்க்கம்) செல்வீர்கள். ஏனென்றால் முக்திலிஜீவன்முக்தி இரண்டையும் சிவபாபா தான் தருகிறார். ஆக, சத்யுக தெய்விக குலத்தை சிவபாபா ஸ்தாபனை செய்கிறார்.

நல்லது நினைவில் சப்தத்தினால் தடை ஏற்பட முடியாது. ஞானம் கேட்பதில் பெரும் சப்தம் அல்லது குழப்பத்தின் தடை ஏற்படலாம். மனிதர்களோ, சாந்தியாக இருங்கள், இல்லை யென்றால் நினைவில் தடைகள் ஏற்படும் எனச் சொல்கின்றனர். ஆனால் யோகத்தில் சப்தம் தடையை ஏற்படுத்துவதில்லை. தடை ஏற்படுத்துவது மாயா. குழந்தைகள் யுத்த மைதானத்தில் தோல்வி அடையக் கூடாது. மாயாவோ குத்து விட்டுக் கொண்டே இருக்கிறது. மாயா மூக்கின் மீது குத்து விட்டால் விழுந்து விடுகின்ற பிறகு எழுந்து நின்ற பின் மூக்கில் குத்து விட்டால் மீண்டும் விழுந்து விடுகின்றனர். ஆக, பாபா சொல்கிறார், இந்த மாயா காமலிகுரோதத்தின் குத்து விடுகிறது. இதிலிருந்து நீங்கள் மிகமிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். குத்துப்படக் கூடாது. நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக் கண்டெடுக்கப் பட்ட குழந்தைகளுக்கு தாய் தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மிகக் குழந்தைகளுக்கு ஆன்மிகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. ஞானத்தின் அனைத்து அலங்காரங்களையும் தாரணை செய்து சுயதரிசனச் சக்கரதாரி, திரிநேத்திரி, திரிகாலதரிசியாக, அதாவது மாஸ்டர் கடவுளாக ஆக வேண்டும்.

2. பாபாவின் வலதுகரமாகிய தர்மராஜரை நினைவில் வைத்து, எந்த ஒரு விகர்மமும் செய்யக் கூடாது. தூய்மையாவதற்கான உறுதிமொழி எடுத்துக் கொண்டு விகாரத்தில் போகக் கூடாது.

வரதானம் : திடமான உறுதிமொழி மூலம் கவனக்குறைவு என்ற தளர்வான (லூஸ்) ஸ்க்ரூவை டைட் செய்யக்கூடிய தீவிர புருˆôர்த்தி ஆகுக.

உறுதிமொழியில் தளர்வு ஏற்படுவதற்கான முக்கிய காரணம் லிலி கவனக்குறைவு. எப்படி எவ்வளவு தான் பெரிய மெஷினரியாக இருந்தாலும் ஒரு சிறிய ஸ்க்ரூ லூஸாகி விட்டால் முழு மெஷினரியும் பயனற்றதாகி விடும். அது போல் உறுதிமொழியை நிறைவேற்றுவதற்காக நல்ல திட்டங்களை உருவாக்குகிறீர்கள்.

புருˆôர்த்தமும் செய்கிறீர்கள். ஆனால் புருˆôர்த்தம் அல்லது திட்டத்தை பலவீனமாக்குகிற ஸ்க்ரூ ஒன்று தான் லி கவனக்குறைவு. அது புதுப்புது ரூபங்களில் வருகிறது. இந்தத் தளர்வான ஸ்க்ரூவை டைட் செய்யுங்கள். நான் பாப்லிசமான் ஆகியே தீர வேண்டும். இந்த திட சங்கல்பத்தின் மூலம் தீவிர புருஷார்த்தி ஆகி விடுவீர்கள்.

சுலோகன்: எல்லையற்ற வைராக்கிய உள்ளுணர்வு தான் சமயத்தின் சமீபத்திற்கான அஸ்திவாரமாகும்.

மாதேஸ்வரியின் விலைமதிப்பற்ற மகாவாக்கியங்கள் (23.01.1957)

இப்போதோ இந்த உலகம் முழுவதும் அறிந்துள்ளது, பரமாத்மா ஒருவர் தான். அதே பரமாத்மாவை சிலர் சக்தி என ஏற்றுக் கொள்கின்றனர், சிலர் இயற்கை எனச் சொல்கின்றனர். அதாவது ஏதேனும் ஒரு ரூபத்தில் நிச்சயமாக அவரை ஏற்றுக் கொள்கின்றனர். ஆக, எந்தப் பொருளை ஏற்றுக் கொள்கின்றனரோ, அது அவசியம் ஏதாவது பொருளாக இருக்கும். அதனால் தான் அதற்கு பெயர் வைக்கப்படுகிறது. ஆனால் அந்த ஒரு பொருளைப் பற்றி இந்த உலகத்தில் எவ்வளவு மனிதர்கள் உள்ளனரோ, அவ்வளவு வழிமுறைகள் உள்ளன. ஆனால் பொருள் பிறகும் கூட ஒன்று தான். அதில் முக்கியமாக நான்கு வழிமுறைகள் சொல்கின்றனர். சிலர் சொல்கின்றனர், ஈஸ்வரன் தான் எல்லாம், சிலர் சொல்கின்றனர், பிரம்மம் தான் அனைத்தும், எல்லாமே பிரம்மமே பிரம்மம் தான் என்று. சிலர் சொல்கின்றனர், ஈஸ்வரன் சத்தியம், மாயா மித்யம் (ஒன்றுமில்லை). சிலர் சொல்கின்றனர், ஈஸ்வரன் என்று யாரும் இல்லை, எல்லாமே இயற்கை தான் என்பதாக. அவர்கள் பிறகு ஈஸ்வரனை ஏற்றுக் கொள்வதில்லை. இப்போது இவ்வளவு வழிமுறைகள் உள்ளன. அவர்களோ உலகம் என்பது இயற்கை மட்டுமே, வேறொன்றுமில்லை என்று சொல்கின்றனர். இப்போது பாருங்கள், உலகத்தை ஏற்றுக் கொள்கின்றனர், ஆனால் எந்தப் பரமாத்மா உலகத்தைப் படைத்தாரோ, அந்த உலகத்தின் எஜமானரை ஏற்றுக் கொள்வதில்லை. உலகத்தில் எவ்வளவு ஏராளமான மனிதர்கள், அவர் களுக்கு இவ்வளவு வழிமுறைகள். கடைசியிலும் கூட இவ்வளவு வழிமுறைகள் அனைத்துக்குமான தீர்வை சுயம் பரமாத்மா வந்து செய்கிறார். இந்த முழு உலகத்திற்கான தீர்ப்பை பரமாத்மா வந்து செய்கிறார். அதாவது யார் அனைவரை விடவும் மேலான சக்திவானாக உள்ளாரோ, அவர் தான் தமது படைப்பின் உண்மையான தீர்ப்பை விஸ்தார பூர்வமாகப் புரிய வைப்பார். அவரே நமக்குப் படைப்பவரின் அறிமுகத்தையும் தருகிறார். பிறகு தமது படைப்பின் அறிமுகத்தையும் தருகிறார்.

அநேக மனிதர்கள் இது போல் கேள்வி கேட்கின்றனர் நாம் ஆத்மா என்பதை எங்களுக்கு உறுதிப் படுத்துவது எது? இப்போது இதைப் பற்றிப் புரிய வைக்கப் படுகிறது லி அகம் (நான்) ஆத்மா, அந்தப் பரமாத்மாவின் குழந்தை என்று நாம் சொல்லும் போது, இது தன்னைத் தானே கேட்டுக் கொள்ள வேண்டிய விஷயமாகும். நாள் முழுவதும் நான்லிநான் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம் என்றால் நாம் யாரை நினைவு செய்கிறோமோ, அவர் எந்த மாதிரி சக்தி, அவர் நமக்கு யாராக இருக்கிறார்? யாரையாவது நாம் நினைவு செய்கிறோம் என்றால் நிச்சயமாக ஆத்மாக்களாகிய நமக்கு அவர் மூலமாக

ஏதோ தேவையாக உள்ளது. ஒவ்வொரு நேரமும் அவரது நினைவு இருப்பதால் நமக்கு அவரிடமிருந்து பிராப்தி (பிரதிபலன்) கிடைக்கும். பாருங்கள், மனிதர்கள் எது செய்தாலும் மனதில் நிச்சயமாக ஏதேனும் சுப ஆசை அவசியம் இருக்கும். சிலருக்கு சுகத்தினுடைய, சிலருக்கு சாந்தியினுடைய ஆசை இருக்கு மானால் நிச்சயமாக ஆசை ஏற்படும் போது அவசியம் யாரோ பெற்றுக் கொள்பவர் இருக்கிறார். மேலும் யார் மூலமாக அந்த ஆசை நிறைவேறுகிறதோ, அவர் அவசியம் எதையோ கொடுப்பவராக இருப்பார். அதனால் தான் அவர் நினைவு செய்யப் படுகிறார். இப்போது இந்த ரகசியத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டும் லி அவர் யார்? இதைச் சொல்லக் கூடிய சக்தி நான் சுயம் ஆத்மா. இந்த ஆத்மாவின் ரூபம் ஜோதி பிந்துவைப் போன்றது. மனிதர்கள் ஸ்தூல சரீரத்தை விடும் போது அது வெளியேறி விடுகிறது. இந்தக் கண்களால் காண முடியா ததாக இருக்கலாம். இதிலிருந்து என்ன தெளிவாகிறது என்றால் அதற்கு ஸ்தூல உருவம் கிடையாது. ஆனால் மனிதர்கள் நிச்சயமாக உணர்கின்றனர், அதாவது ஆத்மா உடலை விட்டு வெளியேறிச் சென்று விட்டது. அதனால், நாம் அதை ஆத்மா என்று தான் சொல்வோம். அந்த ஆத்மா ஜோதி சொரூபம். ஆகவே அவசியம் அந்த ஆத்மாவை உருவாக்குபவராகிய பரமாத்மா வும் அதன் ரூபத்திலேயே இருப்பார். யார் எப்படி இருக்கிறாரோ, அவருடைய படைப்பும் கூட அப்படியே இருக்கும். பிறகு அந்தப் பரமாத்மா, நம் அனைத்து ஆத்மாக்களையும் விட மேலானவர் என்று ஆத்மாக்களாகிய நாம் ஏன் சொல்கிறோம்? ஏனென்றால் அவர் மீது எந்த ஒரு மாயாவின் ஒட்டுதல்லிமுத்திரையும் இருக்காது. மற்றப்படி ஆத்மாக்களாகிய நம் மீது மாயாவின் ஒட்டுதல்லிமுத்திரை அவசியம் இருக்கும். ஏனென்றால் நாம் பிறப்புலிஇறப்பின் சக்கரத்தில் வருகிறோம்.